
உ

சிவமயம்

# திருக்கருகாவூர்

# ஸ்தலவரலாறு

TANJORE



தேவஸ்தான வெளியீடு

1958.

உ
சிவமயம்

# திருக்கருகாவூர்

## ஸ்தல வரலாறு


(தேவாரப் பாடல் பெற்றது)

***

சென்னை ஹிந்துமத அறநிலைய பாதுகாப்பிலாகாவினரின்
விருப்பப்படி
திருக்கருகாவூர்
T. S. கோபாலன்
எழுதியது.

***

ஸ்ரீ முல்லைவனநாதஸ்வாமி தேவஸ்தான வெளியீடு
1958
விலை 25-nP.




நிருதி விநாயகர் ஆலயம்



கர்ப்பக் கிருஹ விமானமும் தென்முகக்கடவுள் சந்நிதியும்

முதற்பதிப்பு 1950
2-வது பதிப்பு 1956
3-ஆம் பதிப்பு 1958

திருச்சிற்றம்பலம்.



சமயாசாரியர்—நால்வர்

என் கடன் பணிசெய்து கிடப்பதே — அப்பர்

Printed by S. Rangaswami, B. A., at the Cauvery Colour Press, Besant Road, Kumbakonam and Published by Sri Mullaivananathaswami Devasthanam, Tirukkarugavur, (Tanjore Dt.)

# முன்னுரை

திருக்கருகாவூர் என்னும் இத்தல வரலாற்றை எழுதியவர் ஸ்ரீ T. S. கோபாலன் அவர்களாவார். இவர் பரம்பரையாகவே சிவபக்தி வாய்ந்த நல்ல குடும்பத்தில் தோன்றியவர். குலநலத்துடன் கல்விநலமும் வாய்ந்த இவர் சிவவழிபாடாற்றுதலுடன் அமையாமல் இத்தலக் கோயில் திருப்பணியையும் மேற்கொண்டு நன்கு சிறக்கச் செய்திருக்கிறார். சிலர் பிறர்போல் புகழுக்கு ஆசைப்பட்டவரல்லர். சிவ புண்ணியங்களைத் தெரிந்தாற்றும் திறல் மிகப் படைத்த இவர், "கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும், வையார் வடித்தநூலார்" என்னும் நீதியைத் திரமாக உள்ளத்துக்கொண்டு செய்வன செய்து புண்ணியப்பேறு எய்திவரும் இயல்பினர். கோயில் தருமகர்த்தரவா யிருத்தலொன்றே பெருமை எனக்கொள்ளாராய்த் தருமகர்த்தா செய்யத் தகுவன இவை எனப் பிறரறிந்து நடக்கும் முறையிலே ஆண்டில் இளையர் ஆயினும் அறிவில் இளையாராய் விளங்கி அறிவுடையவர் உள்ளத்தில் நிலைபெறுமாறு நடந்துவருவதை அறியாதார் அறியாதாரே. மேலும் மேலும் இவர் சிவபுண்ணிய சீலராக விளங்குதலுடன்

இக்கோயிலிலேயே சிறக்கத் தொண்டுசெய்திருந்து, 'பல்லாண்டு வாழ்க' என வாயார வாழ்த்துகின்றேன்.

அறநிலையப் பாதுகாப்பாளருக்கு இவர் அனுப்பிய திருப்பணிச் சுருக்கக் குறிப்பொன்றே இவர் தம் பெருமை சிறுமைகளை அளவிடுதற்குரிய உரைகல் எனக்கருதினேன். இக்கால நிலைக்கேற்ற வகையில் பொதுமக்கள் எளிதில் படித்துணர்ந்து பக்திசெய்யுமாறு நல்ல தலைப்புகளில் இவ்வரலாற்றை எழுதியிருக்கிறார். கோயில் முன்னேற்றத்துக்கு ஆவன எத்தனையோ செய்திருக்கிறார் என்பதைக் குடந்தையிலிருந்து சிவனடியார் திருக்கூட்டத்துடன் வந்து அடிக்கடி அறிந்து ஊக்கப்படுத்தி வந்ததுண்டு. கால ஒழுங்கு, செயலொழுங்கு முதலியன இவருக்கு இயல்பாகவுள்ளன. இவர் தருமகர்த்தாவாக வருவதற்குமுன்னர் இக் கோயிலை அறிந்தவர் இவருடைய பெருந்தொண்டைப் பாராட்டி ஆண்டவனை வழுத்திவருவர் என்பதில் ஐயமில்லை.

இத்தலபுராணச் செய்யுளையும் கூடிய விரைவில் அச்சிட்டால் கற்றோர்க்கு நல்ல விருந்தாகும் எனக் கருதுகின்றேன்.

இங்ஙனம்,
சித்தாந்த சைவமணி—
**த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை**
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்

குடந்தை
26-11-'58

# முகவுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் ஊற்றிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்பது ஆன்றோர் மொழி. தென்னாட்டில் காணும் இடங்களிலெல்லாம் கண்கவர் ஆலயங்கள் பல உள. அவைகளுள் திருக்கருகாவூர் என்ற இந்தத் தலம் பல வகைகளிலும் சிறப்புடையது. கோவிலுக்கு வருவோர் கோவிலின் பெருமைகளை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகா சமேத ஸ்ரீ முல்லைவன நாதர் எழுந்தருளிய திருக்கருகாவூர் கோவிலின் பெருமைகளை இவ்வரலாறு சுருக்கமாக விளக்குகிறது. பழங்காலச் சின்னங்களாகிய கோவிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தல வரலாறுகள் வெளிவரச் செய்வதிலும், சமய உண்மைகளைப் பரப்புவதிலும், திருத்தொண்டர்களின் திருக்கோயில்களை அமைப்பதிலும் செயல்பட்டுவரும் சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (H. R. & C. E.) அமைச்சர் கனம் M. பக்தவத்ஸலம், B.A., B.L. அவர்கள், தலைமை ஆணையர் திரு. A. உத்தண்டராம பிள்ளை, B. A., B. L., I. A. S. அவர்கள், துணை ஆணையர் திரு A. சர்க்கரை சேர்வை, B. A., B. L. அவர்கள், உதவி ஆணையர் திரு. K. V. குமரன் நாயர், B. A அவர்கள், இன்ஸ்பெக்டர் திரு. V. V. சுப்பராயன் அவர்கள் ஆகியோருடைய ஊக்கத்தால் இந் நூல் வெளியிடப்படுகிறது. பொதுமக்களின் ஆர்வங் காரணமாக இத் திருத்தியபதிப்பு மூன்றும் முறையாக வெளிவருகிறது. இவ்வெளியீட்டுக்குப் போட்டோக்கள் எடுத்து, பிளாக்குகள் தயாரித்துக்கொடுத்தும், 22-12-57ல் தினமணி சுடர் அனுபந்தத்தில் ஸ்தலவரலாறு எழுதி மக்களுக்கு அறியச் செய்தும், கல்வெட்டுக்களை மிகுந்த சிரமத்தின்பேரில் சென்னையிலிருந்து பிரதி எடுத்துக் கொடுத்தும் உதவிய, பத்திரிகைகளில் ஸ்தல வரலாறுகள் எழுதி வரும் திரு M. K. ரெங்கசாமி அய்யங்கார் அவர்களுக்கு தேவஸ்தானத்தாரின் நன்றி உரித்தாகுக. அன்பர்கள் படித்து ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை சமேத ஸ்ரீ முல்லைவன நாதரின் திருவருளைப் பெறுவார்களாக.

ஸ்ரீ முல்லைவன நாதஸ்வாமி தேவஸ்தானம்
திருக்கருகாவூர். 8—11—58


T. S. கோபாலன்
டிரஸ்டி

## உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | தலமும் இருப்பிடமும் | ... | 1 |
| 2 | தலப் பெயர்கள் | ... | 1 |
| 3 | கோயிலமைப்பு | ... | 2 |
| 4 | மூர்த்திகள் | ... | 3 |
| 5 | தீர்த்தங்கள் | ... | 3 |
| 6 | தலப் பெருமை | ... | 4 |
| 7 | புராண வரலாறும் வழிபட்டோர்களும் | ... | 7 |
| 8 | சுற்றுக் கோவில்கள் | ... | 14 |
| 9 | சிற்பங்கள் | ... | 14 |
| 10 | நாள் வழிபாடும் திருவிழாக்களும் | ... | 14 |
| 11 | திருப்பணி | ... | 15 |
| 12 | சமயப்பணி | ... | 16 |
| 13 | சொத்துக்கள் | ... | 16 |
| 14 | நிர்வாகம் | ... | 17 |
| 15 | கல் வெட்டுக்கள் | ... | 17 |
| 16 | பொதுநலப்பணி | ... | 21 |
| 17 | புராணங்களும் திருப்பாடல்களும் | ... | 21 |
| 18 | Tirukkarugavur — A summary | ... | 22 |
| 19 | தேவாரப் பாடல்கள் | ... | 26 |


## கோவில் விளக்கம்


கோவில்—திருக்கருகாவூர்,
விநாயகர்—கற்பக விநாயகர்,
மூலவர்—ஸ்ரீ முல்லைவன நாதர்.
அம்மன்—ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை.
தீர்த்தம்—க்ஷீரகுண்டம் முதலியன.
தலவிருக்ஷம்—முல்லை.
முக்கிய விழா—வைகாசி விசாகம்.




ஸ்ரீ ஸோமாஸ்கந்தர்



ஆடல்வல்லான்



நடராஜ மண்டபச் சிற்பம்



ஸ்ரீ ஷண்முகர் — உத்ஸவர்

உ
சிவமயம்

# திருக்கருகாவூர் ஸ்தல வரலாறு

காப்பு

முன்ன வன்றிரு முல்லை வனப்புகழ்
பன்னு காதையைப் பைந்தமி ழாற்சொல
மன்னு கற்பக வாரண மாமுகன்
பொன்னஞ் சேவடி போற்றி வணங்குவாம்

## 1 தலமும் இருப்பிடமும்

வற்றுருத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதி பாயும் சோழ நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே பாபநாசம் கூற்றத்திலே பாபநாசம் புகைவண்டி நிலையத்தில் இருந்து தெற்கே சாலியமங்கலம் புகை வண்டி நிலையத்துக்குச் செல்லும் கற்சாலையிலே பாப நாசம் புகைவண்டி நிலையத்தில் இருந்து 3½கல் தொலை வில் இத்தலம் உள்ளது. பஸ், வண்டி வசதி உண்டு. சோழநாட்டில் உள்ள தேவாரப் பாடல்கள் பெற்ற 274 தலங்களில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள127 தலங் களில் இந்தத் தலமும் ஒன்று.

## 2 தலப் பெயர்கள்

முல்லைவனம், மாதவீவனம், கருகாவூர், கருப்பபுரி என்ற பெயர்களால் வழங்கப் பெறுவது. திருஞான

சம்பந்தப்பெருந்தகையால் "கமுதமுல்லை கமழ்கின்ற கருகாவூர்' என அருளப் பெற்றது.

## 3 கோயிலமைப்பு

கோயில் ஊரின் மத்தியிலே நீளம் 460 அடிகளும், அகலம் 284 அடிகளும் கொண்டு மிகவும் அழகான தோற்றத்துடன் உயரமான மதில்களால் சூழப் பெற்று, எதிரே க்ஷீ ர கு ண் ட ம் என்கிற திருக்குளத்துடன் ரமணீயமாகக் காட்சியளிக்கிறது. கோயிலின் கீழ்ப்புறம் பழமையான சிற்பங்கள் நிறைந்து ஐந்து நிலை இராஜ கோபுரத்துடன் கூடிய வாயிலுடனும் கோபுரத்தின் தென்புறம் ஸ்ரீசர்வசித்திவிஞயகர் கோ யி லு ட னும் அமைந்துள்ளது. கோயிலின் உட்புறம் இரண்டு பிரகாரங்களும் மதிலின் புறத்தே தேரோடும் வீதிகளும் உள்ளன. கோயிலின் உட்புறம் நுழைந்ததும் தென் புறம் திருநந்தவனமும் வடபுறம் வசந்த மண்டபமும் இரண்டாவது கோபுர வாயிலுள் நுழைந்ததும் தென் புறம் நால்வர் அறுபத்து மூவர் மற்றும் தனியடியார் ஒன்பது பேர் திருவுருவமும் கொஞ்சம் மேற்கே பிரகா ரத்தில் கல்லாலின்புடையமர்ந்த பெருமான் திருவுரு வமும் நிருதி விஞயகர் சன்னிதியும் கொஞ்சம் வடபுறம் ஷண்முகக் கடவுள் சன்னிதியும், வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுரர் துர்க்கை சன்னிதியும் அமைந்துள்ளன. வடக்குப் பிரகாரத்தில் மகாமண்டபத்தை ஒட்டினற் போல் தலவிருக்ஷம் மு ல் லை க் கொ டி படர்ந்த பந்தர் காணப்படுகிறது. ஈசான திக்கில் யாகசாலையும் நடருஜர் சபாமண்டபமும் அதில் நித்துருவர், கார்க்கியர், சங்கு கர்ணன் முதலியோர் பூஜித்த சிவலிங்கங்களும் பைர வர் சன்னிதியும் அமைந்துள்ளன. சன்னிதானத்தின் எதிரே த்வஜஸ்தம்பம், பலிபீடம், சேர்ந்தாற்போல்

இரண்டு நந்திகளும் உள்ளே நுழைவில் வலதுபுறம் சபாபதி நவக்கிரஹம் சன்னிதிகளும் இடதுபுறம் சந்தானுசாரியர் ஐவர் சன்னிதியும் உள்ளே மகாமண்டபத்தில் தென்புறம் சோமாஸ்கந்தர், கற்பக விநாயகர் சன்னிதானமும் வடபுறம் உத்ஸவர்கள் திருவுருவங்களும் பள்ளியறையும் அர்த்த மண்டபத்தில் போக சக்தியம்மையும் கர்ப்ப கிருஹத்தில் ஸ்ரீ முல்லைவன நாதரும் அமர்ந்துள்ளார்கள். இரண்டாவது கோபுரத்துக்கு வடக்கே அம்மன் சன்னிதிக்குப் போகும் வழியில் சத்திய•கூபம் என்ற தீர்த்தமும் கொஞ்சம் வடபுறம் மேற்கு முகமாக கௌதமேசுரர் கோயிலும் அதற்கு எதிர்புறம் கிழக்கு முகமாக அம்பாள் கருக்காக்கும் நாயகியின் சன்னிதியும் உள்ளன. அம்பாள் ஆலயம் தனியாக பிரகாரத்துடன் அமைந்துள்ளது. மேற்படி ஆலய உள் நுழைவில் வலது இடது புறங்களிலும் தல வரலாறு சுருக்கமாகப் படங்களில் வரையப் பட்டுள்ளது. அம்பாள் ஆலயம் மிகவும் வசீகரமாகக் கண்டோர் மனம் கரையும் வண்ணம் அமைந்துள்ளது.

## 4 மூர்த்திகள்

இறைவன் பெயர்கள் :— ஸ்ரீ முல்லைவன நாதர், ஸ்ரீ மாதவீ வனேஸ்வரர், கர்ப்பபுரீஸ்வரர்.

இறைவியின் பெயர்கள்:— ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகை, ஸ்ரீ கரும்பனையாளம்மை, ஸ்ரீ கருக்காக்கும் நாயகி.

## 5 தீர்த்தங்கள்

பிரமதீர்த்தம். ஆலயத்துக்கு தென்மேற்கு பாகத்தில் கப்பி ரஸ்தாவின் கீழ்புறம் சுமார் 4 பர்லாங் தொலைவில் உள்ளது.

க்ஷீரகுண்டம். ராஜகோபுரத்திக்கு எதிரே உள்ளது.

சத்தியகூபம். சுவாமி அம்பாள் கோவிலுக்கு இடையே உள்ளது.

விருத்த காவேரி. ஊரின் வட புறத்தே வெட்டாறு என்ற பெயருடன் ஓடுவது.

## 6 தலப்பெருமை

ஸ்காந்த புராணத்தில் க்ஷேத்திர வைபவ காண்டத்தில் சனற்குமாரசம்ஹிதையில் நாரத மகாமுனிக்கு சனற்குமார மகாமுனியால் விளங்கச் சொல்லப்பட்டது.

இத்தலம் மிகவும் புராணப் பெருமையுடையது. மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. பின்வரும் பாடல்களில் இத் தலத்தின் பெருமைகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

எந்த நாட்டிருந்து மாதவி வனத்தினிருந் திசை நோக்கி [மூன்றடியிட்
டந்த மாய் நடக்கி லோரடி யதனுக் களவில் பாதக [மெலாமகலும்
உந்திய விரண்டா மடியினுக்கமரருலக மேலுலகமெலா முறுவர்
புந்திசெய் மூன்ரு மடியினுக் கமலம் பொருந்து சாயுச் [சியம் பெறுவர்.
(த. பு)

"மாத விவனத்தை நினைக்கினும் சொலினும் வசிக்கினும் [புகினும் காண் குறினும்
காதலுடனே கேட்கினும் பிறவூர்க் கன்னகர் வழிக் [கொடு செலினும்
தீதெலா மகல்வாரினிய போகங்கள் தெவிட்ட வுண்டர [ஞெடுகலப்பார்
தாதவிழ் சடில முனிவர்காளிது சத்தியஞ் சத்திய மால்" (த. பு)

முத்தித்தலங்களை ஒரு சேரத் தொகுத்துக் கூற வந்த திருத் தருமபுர ஆதீனத்து ஸ்தாபகர் ஸ்ரீமத் குரு ஞானசம்பந்த ஸ்வாமிகளும்

"தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்,
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் –நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்"

என அருளுவாராயினர்.

இத்தலத்து விநாயகர் கற்பக விநாயகர் என்ற பெயருடையவர். மிகச் சித்தியுடையவர். உளிபடாத மேனியை யுடையவர். தன் பெயருக்கேற்ப வேண்டி யதை யெல்லாம் அளிக்கக் கூடியவர்.

இத்தலத்தில் பிர்மா, கார்க்கியர், கௌதமர், குஜத் வசன், சங்கு கர்ணன், நித்துருவர், பீமசேனன், புண்ணியத்துவசன், சந்திரன் முதலியவர்கள் தங்கி தங்களுக்கேற்பட்ட இடர் நீங்கி பேறு பெற்றார்கள். இத்தலத்தின் நாயகர் ஸ்ரீமுல்லைவன நாதர் "ஸ்வயம்பு" திருமேனி யுடையவர். அப்பர் அடிகளால் "கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும் கண்ணும் கருகாவூர் எந்தைதானே" என்று போற்றப்பட்டவர். இறைவி ஸ்ரீ கர்ப்பரக்ஷை இத்தலத்தில் வசித்த நித்துருவரின் பத்தினி வேதிகைக்கு ஊர்த்துவ பாத மகரிஷியின் சாபத்தால் ஏற்பட்ட கருச் சிதைவைக் காத்து ரக்ஷித்து உருக் கொடுத்த காரணத்தால் கர்ப்பரக்ஷை என்ற பெயருடன் விளங்குகிறாள். இதன் காரணமாகத் தான் இத்தலத்துக்கு "கருகாவூர்" என்றும் "கர்ப்பபுரி" என் றும் பெயர் ஏற்பட்டது போலும்.

தொன்றுத் தொட்டு இந்தத் தலத்து எல்லைக்குள் வசிக்கும் தாய்மார்களுக்கோ, அல்லது அம்பிகையைப் பிரார்த்தித்துக் கொண்ட தாய்மார்களுக்கோ கருச் சிதைவு, குறைப் பிரசவம் முதலியன ஏற்பட்டது கிடை யாது. இத்தலத்தில் கர்ப்ப வேதனையினுல் தீங்கு ஏற்படாமல் காப்பாற்ற வேண்டுமென பிரார்த்தித்துக் கொண்ட நித்துருவரின் வேண்டுகோளின்படி இத் தலத்தில் வசிப்பவர்களுக்கும் பிரார்த்தித்துக் கொண்ட தாய்மார்களுக்கும் எவ்வித கர்ப்ப வேதனையும் கிடையா தென்பது உறுதி. இது காரணமாக எல்லாமதத்தினரும் போற்றி வழிபடுகிருர்கள். இன்றும் காலை முதல் இரவு அர்த்த ஜாமம் வரை அம்பாள் பாதத்தில் ஆதிசைவ ரால் ஆமணக்கெண்ணெய் வைத்து அபிமந்திரித்து கேட்கும் தாய்மார்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்தலத்தில் கருவுற்றது முதல் பிரசவம் வரை காலன் கைபட்ட தாய்மார்கள் இது வரை கிடையாது. இத் தலத்தின் பெருமைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். ஒரு முறை இத்தலத்து இறைவனையும் இறைவியையும் தரிசித்தவர்கள் ஆண்டவனின் கருணை வடிவைப் புரிந்து கொள்வார்கள். இறைவனுக்கு அபிஷேகம் புனுகு சட்டம். ஆவுடையாருக்கு மட்டுமே தினசரி அபி ஷேகம் நடக்கிறது. இந்தத் தலத்தின் விருக்ஷமாகிய முல்லைக்கொடியில் இருந்து தினசரி வழக்கமாக முல்லைப் புஷ்பங்கள் மூர்த்திகளுக்குச் சாத்தப்படுகிறது. முல்லை வனத்தில் வந்து தீர்த்தங்களில் முறைப்படி நீராடி வழி படுவோர் காசி முதல் கன்னியா குமரிவரை சென்று அநேக தீர்த்தங்களிலும் நீராடிய பலனைவிட அதிகம் பெறுவர் என்று தலபுராணம் விரிவாகக் கூறுகிறது.

நகர வாழ்க்கையில் மன அமைதி பெற முடியாமல் அல்லற்படும் மக்களுக்கு மனஅமைதியை உண்டாக்கும்

இடம். அநேக கல் வெட்டுக்களை உடையது. இவ்வாலயத்தின் அமைப்பே ஆலயத்தின் புராதனத்தைக் காண்பிக்கும்.

சைவ சமயாசாரியர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர் இவர்களால் போற்றிப் புகழப்பட்ட பாடல்களை யுடையது.

தேவ நாகரியிலும் தமிழிலும் தல புராணங்கள் இருக்கின்றன. தமிழ் தல புராணம் 9 சருக்கமாக 338 பாடல்களை யுடையது.

## 7 புராண வரலாறும் வழிபட்டோர்களும்

(1) பிரமன்:— பிரம்ம தேவருக்கு நான் என்ற ஆணவம் ஏற்பட்டு சிருஷ்டித் தொழில் கைகூடாமையால் இத்தலத்தில் பிர்ம தீர்த்தம் என்ற குண்டமமைத்து சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூஜித்து இறைவன் திருவருளால் மறுபடியும் சிருஷ்டித் தொழில் கைகூடப் பெற்று சத்திய லோகம் அடைந்தார்.

(2) கார்க்கியர்:— பிருகு கச்சம் என்ற ஆரண்யத்தில் தவம் செய்து கொண்டிருந்த கார்க்கியர் என்பவர் முன் நின்று புலம்பிய ஓர் அலகையைக் கண்டு நீ யார்? உன் வரலாறு என்ன? என்று வினவ, அப்பைசாசம் அவரைப் பார்த்து நான் கேரள தேசத்தில் பிறந்த சுவர்ணகரன் என்னும், வைசியர் என்றும், ஓர் அந்தணனுல் அடைக்கலமாகக் கொடுத்து வைக்கப் பட்ட பொருளை மோசம் செய்த காரணத்தால் 21 யுகம் யாதனு சரீரத்துடன் ரவுரவாதி நரகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் என்றும் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று முறையிட்டுக் கொண்டதன் பேரில்

அம்முனிவர் காசி முதல் குமரி வரையில் அந்த அலகை யை அழைத்துச் சென்று தீர்த்தமாடி பல தலங்களையும் வழி பட்டும் அலகை ரூபம் நீங்காமல் இந்தத் தலத்திற்கு வந்து மார்கழி மாதம் ஆதிரையில் பிரம தீர்த்தத்தில் நீராடி அலகைரூபம் நீங்கி சுயரூபத்தை யடைந்து சகல ஜீவர்களும் பார்க்க தேவலோகம் அடைந்தார். அதைக் கண்ணுற்ற கார்க்கியர் தான் முக்திப் பேறு அடையும் பொருட்டு முல்லைவன நாதரை வழிப்பட்டு நிற்க "திருப்பணி செய்வாய்" என்ற இறை வன் ஆணையை மேற்கொண்டு கர்ப்பக் கிருஹம், உமா தேவியார் கோயில், மாடங்கள், மேல் மாடம், மண்டபம், திருமதில், திருவீதி, வாவி, கூபம், திருத்தேர் இவை களை யெல்லாம் திருப்பணி செய்து வைத்து நெடு நாள் வசித்து, சிவபதம் அடைந்தார்.

(3) கௌதமர் :—

கிரகங்கள் வக்கரித்ததன் காரணமாகத் தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் மழையில்லாது போனதால் பல இடங்களில் இருந்து வந்த முனிவர்கள், பிராம மணர்கள், மற்ற ஜீவராசிகளுக்கு அன்னமிட்டு ரக்ஷித்து வந்த கௌதம முனிவர் பஞ்சம் தெளிந்த பின் தங்கள் தங்கள் இடம் போக வேண்டுமென்று விடை கேட்ட முனிவர்களுக்கு அன்பினல் விடை கொடாமலிருக்க அம்முனிவர்கள் வெகுண்டு கௌதம ருக்கு நிந்தையுண்டாக்க வேண்டுமென்று கருதி மாயத் தால் ஒரு பசுவுண்டாக்கி கௌதம முனிவர் வளர்த்த பயிரை அதனல் மேய்த்தார்கள். சூதையறியாத கௌதமர் பலபேர்கள் பசியைத்தீர்க்கும் பயிரைத் தின் கிறதே என்று நினைத்து பசுவை அடிக்கக்கூடாதென்று ஒரு தர்ப்பை நுனியினல் ஓங்கி விலகிப் போவென

விலக்க அம்மாயப்பசு இறந்து பூமியில் விழுந்தது. அதைக்கண்ட முனிவர்கள் கௌதமர் கோஹத்தி செய்தார்; இவர் முகத்தில் முழிப்பதும் பாபம் என்று விலகிப் போனார்கள். சூதை திருஷ்டியாலறிந்த கௌதமர் அவர்களைச்சபித்து அபவாதத்தை நீக்க தீர்த் தயாத்திரை செய்தார். பல தலங்களையும் தரிசித்து அபவாதம் நீங்காமல் மனம் வருந்தி திருவையாற்றை அடைந்து ஈசனை வழிபட்டிருந்தபோது அங்கிருந்த போதாயனமுனிவர் தன் சிஷ்யர்களோடும் வரக்கண்டு முறைப்படி வணங்கித் துதித்துத் தன்குறையைத் தெரிவிக்க, அவர் இரக்கம் கொண்டு திருவையாற்றின் அக்கினி மூலையில் உத்தமமாகிய "கருகாவூர்" என்ற தலம் இருக்கிறது, அத்தலத்தில் உள்ள அமிர்தகுண்டத்தில் நீராடினால் வினை தீரும் என்றருள, அவ்வாறே இத்தலத்தையடைந்து நீராடி இறைவனை வழிபட்டு நிற்க, கோஹத்தி அபவாதம் நீங்கியது. அவர்வியந்து வணங்கி, ஆலயத்தின் ஈசானதிக்கில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டு விடைபெற்று காசியபர், முதலிய ஆறு முனிவர்களுடன் போய் அவர்களைப்போல் தாமும் சப்தரிஷிகளில் ஒருவராகி மற்றும் அநேக சிறப்புக்களையும் பெற்றார்.

(4) குஜத்வசன் :—

இமயமலையின் வடபால் உள்ள வனத்தில் தவம் செய்து வந்த சத்திய முனிவர் தன்முன் முறையிட்ட மக்களின் வருத்தத்துக்கு, குஜத்வசன் என்னும் அரசன் தன்சதுரங்க சேனைகளோடு அடர்ந்த அந்த வனத்துள் வேட்டைக்கு வந்திருப்பதுதான் காரணம் என திருஷ்டியால் அறிந்து, அரசனை அழைத்து அவ்வனத்தின் பெருமையைக்கூறி இதில் வேட்டையாடினால் ஜீவ

ஜந்துக்களுக்கும் மக்களுக்கும் தவத்துக்கும் இடையூறு ஏற்படும் அதனுல் வேண்டாம் என்று பலமுறைகூற அரசன் மதியாமல் அகந்தையால் வேட்டையாட ஜீவ ராசிகள் மிகவும் வருத்த மடைந்தன. சொல்லியும் கேளாததால் முனிவர் வெகுண்டு நீ புலியாகக்கடவது என்று கொடுத்த சாபத்தின் பேரில் அரசன் நடுங்கி பாதத்தில் விழுந்து வணங்கி பொறுக்கும்படி வேண்ட அவர் மனமிரங்கி நீ ஆயிரம் ஆண்டுகள் புலி ரூபமாக சஞ்சாரம் செய்து பிறகு திருக்கருகாவூர் என்னும் தலத்தில் என்னுல் தீர்த்த யாத்திரையின் போது உண்டாக்கப்பட்ட சத்திய கூபம் என்னும் வாவியின் நீர் உன் மேல் படுதலால் உன் சாபம் நீங்கி சுய ரூபம் அடைவாய் என்று கூற அதன் படி அரசன் பல இடங்களில் சஞ்சரித்து முல்லேவனத்தை அடைந்து சாப நிவர்த்தி காலம் அறிந்து ஆலயத்தை வலம் வந்து கார்க்கியர் முதலிய முனிவர்கள் துதிக்கும் இறை வனே வழிபட்டு கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக்கிழமை யில் தீர்த்தமாடி சுய உருவம் பெற்ருன். அங்கு வசித்த அந்தணர், ஆதிசைவர் இவர்களுக்கு வீடு கழனி இவற் றை வேண்டிய மட்டும் கொடுத்து பெருமானே வழிபட்டு வைகாசி மாதத்தில் பூர்வ பக்ஷத்தில் புனர் பூசத்தில் துவஜாரோஹணம் செய்து திருவிழா செய்து பத்தாம் நாளில் விசாக நக்ஷத்திரத்தில் தீர்த்தோத்ஸவத்தை நடத்தி பலவித தானங்கள் செய்து பெருமானுக்கு அநேக வித ஆபரணங்களேயும் திரவியங்களேயும் கொடுத்து நித்திய மாத அயன உத்ஸவங்களேயும் நடத்தி முல்லேவனப் பெருமானே தெரிசித்து இருந்து அநேக வரங்களேப் பெற்று தன் நகர்ப் போய்ச் சேர்ந் தான்.

(5) சங்குகர்ணன் :—

பிருகு கச்ச மென்னும் தலத்தில் எல்லா அறநெறிகளையும் உடைய பெருங்கன்னனென்றும் அந்தணர் ஒழுக்கங் குறையாது வாழும் நாளில் தன் மனைவியினிடத்து சங்குகர்ணன் என்னும் குழந்தையைப் பெற்ருர். பருவமடைந்து தக்க கல்விக்காக வேதநிதி யென்னும் குருவையடைந்து நூல்களைக் கேட்டறிந்து முடிவில் குரு காணிக்கை கொடுக்க முற்படவே அவர் வாங்க மறுத்தும் வற்புறுத்தவே அவனுடைய நற்குண நற்செய்கை கல்வி அறிவு இவைகளைக் கண்டு அப்படியாயின் நான் கொடுக்கும் பொருளை நீ பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லி தன்மகளை விவாஹம் செய்துகொள்ள வேண்டு மென்று கேட்க, அது கேட்ட சங்குகர்ணன் தீர்க்க திருஷ்டியால் குரு புத்திரியின் முன் ஜன்மங்களை அறிந்து விரதத்தை முறைப்படி உத்தியாபனம் செய்யாத காரணத்தால் அவள் இருபத்து நாலு பிறவிவரை அமங்கலையாவாள் என்பதையும் அதன்படி இருபத்து நாலு பிறவிகளில் இன்னும் மூன்று பிறவி பாக்கி இருப்பதையும் அறிந்து அவரிடம் தெரிவித்து குரு புத்திரியானதால் தான் விவாஹம் செய்து கொள்வது முறையல்ல என தெரிவிக்க அவர் கோபமடைந்து நீ பேயுருவாகி உன் குடும்பப் பெருமையை இழக்கக் கடவாய் என்று சபிக்க அதனுல் மூவாயிரம் வருஷம் பலவித துன்பங்கள் அடைந்து கடைசியாக இத்தலத்தை அடைந்த மாத்திரத்தாலேயே தன்னுடைய சுய அறிவைப் பெற்ருன். அன்றைய தினம் மார்கழி மாதத்து பௌர்ணமியும் திருவாதிரை நக்ஷத்திரமுமாகும். அன்று திருவிழா மண்டபத்தில் ஸ்ரீ முல்லைவன நாதர் கரும்பனையாளம்மையோடு எழுந்தருளியிருந்தார். அவரை தரிசித்து சாப நிவர்த்தி பெற்ருன்.

தல விசேடத்தையறிந்து பிர்ம தீர்த்த மேல் கரையில் தன் பெயரால் ஒரு லிங்கம் ஸ்தாபித்து வணங்கியிருந்து நீண்ட நாள் வாழ்ந்து முடிவில் ஸ்ரீ முல்லைவன நாதர் திருவடியைப் பெற்ருன். இவ்விதமாக அவனுடைய குரு சாபம் நீங்கப் பெற்றது.

(6) நித்துருவர் :—

சகல கலைகளிலும் தேர்ந்தவரும் மௌன விரதத்தை உடையவருமான நித்துருவரென்னும் முனிவர் வசிட்டர் வமிசத்தில் தோன்றிய வேதிகை என்னும் பெண்ணை மணந்து இல்லறம் நடத்திவரும் நாளில் தீர்த்த யாத்திரை செய்து பலதலங்களையும் தரிசித்து, நீராடி, பசுபதீச்சுரத்து நிருதியில் உள்ள இத்தலத்தையடைந்து பர்ணசாலை அமைத்து வசித்துவந்த நாளில் மனைவி வேதிகை கருவுற்ருள். அதுபோது வருணன் என்பவன் வேண்டிக்கொள்ள நித்துருவர் யாகம் செய்வதற்காகப் போயினுர். கருத்தரித்திருந்த வேதிகை தனித்திருந்தபோது தீர்த்தயாத்திரை செய்து வந்த ஊர்த்துவபாத முனிவர் உண்டு பசிதீர ஆசிரமத்தில் வந்து, பர்ணசாலையருகில் போய் பிச்சைகேட்க வேதிகை நிறைகர்ப்பத்தால் எழுந்து பிச்சையிடமுடியாதவளாக அசக்தமுற்று இருந்தாள். முனிவர் அதனை அறியாமல் தன்னை அவமதித்தாளென்று கோபம் கொண்டு "இராசயட்சு என்ற நோயடையக் கடவாய்" என்று சபித்துப் போனுர். அச்சாபத்தின் வலிமையால் துன்பமுற்ற வேதிகையின் கரு நழுவி கீழே விழுந்தது. சோகத்தால் மயங்கி விழுந்து, எழுந்து ஸ்ரீ முல்லைவன நாதரை பிரார்த்திக்க அவர் தோன்றி தேற்றி, நழுவி விழுந்த சிசுவை அழைத்து அம்பிகையின் அமுத கும்பத்தில் வைத்து குழந்தையின் அவயவங்கள்

குற்றமில்லாமல் நிறையச் செய்து தேவப்பசு காம தேனுவை அழைத்து குழந்தைக்குப் பாலூட்ட அனுக்கிரகித்து பிரம்ம தீர்த்தில் மூன்று காலமும் ஸ்நானம் செய்து நூற்றெட்டு செங்கழுநீர் புஷ்பத்தால் என்னை அர்ச்சித்தால் வருடம் ஒன்றில் இச்சாபம் நீங்குமென்று கூறி மறைந்தார்.

பின்னர் யாகம் செய்யப்போன நித்துருவர் திரும்பி வந்து நிகழ்ந்ததைக்கேட்டு ஆனந்தமெய்தி இறைவனைப் பலவாருகத் துதித்து வணங்கி இத்தலத்தில் இன்றுமுதல் கர்ப்ப வேதனையால் தீங்கு ஏற்படாமல் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வாறே இறைவி அருள் செய்தாள். இந்திரனல் தடைப் படுத்தப்பட்ட காமதேனு ஆலயத்தின் எதிரே தன் குளம்பினுல் ஒரு வாவி அமைத்து அதில் பாலைச் சொரிந்து குழந்தைக்கு வேண்டுமளவு பாலாகவும் பிறகு தீர்த்தமாகவும் ஆகி ஆன்மாக்களை உய்விக்க வேண்டுமென்று கேட்க அதன்படியே ஸ்ரீ முல்லைவன நாதர் அருளினுர்.

(7) பீமசேனன்:—

இத்தலத்தில் வந்து மாசிமாத ஏகாதசியில் சிவ வழிபாடு செய்து உபவாசமிருந்த பீமசேனன் ஏகா தசி விரதபலத்தை அடைந்தான்.

(8) புண்ணியத்துவசன்:–

புண்ணியத்துவசன் என்ற அந்தணன் இத்தலத்தில் உள்ள பிர்ம்ம தீர்த்தத்தில் நீராடி இறைவனைப் பூசித்துத் தனக்கேற்பட்ட அலகை ரூபம் நீங்கப்பெற்று முக்தியடைந்தான்.

(9) சந்திரன்:–

தக்ஷனது சாபத்தினுல் ஏற்பட்ட தோஷம் நீங்க பங்குனி மாதப் பூரணியில் இத்தலத்து இறைவனை வழிபட்டு தோஷம் நீங்கப்பெற்ருன். இன்றும் பங்குனி மாதப் பௌர்ணமியில் இறைவன் திருமேனியில் சந்திரனின் கிரணம் படுகின்றது.

## 8 சுற்றுக்கோயில்கள்

ஆலயத்திற்குத் தென்மேற்கில் ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயமும் தெற்கு வீதியில் க்ஷீரகுண்டத்தின் தென்கரையில் ஸ்ரீ முல்லை மாகாளியம்மன் கோயிலும் உள்ளன. மற்றும் மாரியம்மன், திரௌபதியம்மன், விஞயகர், ஐயஞர் கோயில்களும் உள்ளன,

## 9 சிற்பங்கள்

கருப்பக்கிருகத்தின் வெளிப்பக்கத்தில் உள்ள விமானத்தில் பூதவரியும், யானைகளும் விமானத்தில் உள்ள நந்தி மற்ற வேலைப்பாடுகள் அழகாக அமைந்துள்ளன. அவை பார்க்கக்கூடியனவாகும். மற்றும் கோஷ்டங்களில் உள்ள பிர்மா, அர்த்தநாரீசுரர் இவர்கள் திருவுருவங்களும் நடராஜர் மண்டபத்தில் சக்கரங்களுடன் கூடிய குதிரையின் அழகான வேலைப்பாடும் பார்க்கக்கூடியவைகள்.

## 10 நாள் வழிபாடும் திருவிழாக்களும்

காரண காமிகாகமப்படி நான்குகாலப் பூசைகள் நாள்தோறும் நடைபெறுகின்றன. வைகாசி மாதத்தில் பிரம்மோத்சவமும் நடராசா அபிஷேகங்கள், ஆடிப்பூரம், நவராத்திரி உற்சவங்கள், நிறைபணி, அன்னபிஷேகம், கந்தர்சஷ்டி உற்சவங்கள், திருக்

கார்த்திகை, திருவாதிரை உத்சவம், மகாவியதீபாதம் சங்கராந்தி பாரிவேட்டை, பங்குனி உத்தரம் முதலிய விழாக்களும் அறுபத்துமூவர் குருபூஜை விழாக்களும் முறைப்படி நடைபெறுகின்றன.

## 11 திருப்பணி

பெரிதும் கிலமுற்றிருந்த திருமதில்களைப் புதுப் பித்தும் சுவாமி அம்பாள், ஆலயங்களைப் பூராவாகப் பழுது பார்த்தும் துர்க்கையம்மன் சந்நிதி புதிதாக நிர்மாணித்தும் கட்டைக் கோபுரம், வசந்தமண்டபம் பழுதுபார்த்தும் பூராவாக வர்ணம் வைத்தும், சுதைகள் அமைத்தும் அம்பாள் சந்நிதி முகப்பில் இராஜ ராஜே ஸ்வரி திருவுருவங்களமைத்தும் 13—9—1956-ல் மகா கும்பாபிஷேகம் தேவஸ்தான நிதியிலிருந்தும், பொது மக்களின் நன்கொடையைக் கொண்டும் வெகுவிரி வான முறையில் அறநிலைய பாதுகாப்பிலாக்காவினரின் ஒத்துழைப்புடன் நடத்திவைக்கப் பட்டது. தற்போது பாக்கியிருக்கும் தென்புறம் திருமதில் திருப்பணியும் நடந்து கொண்டு இருக்கிறது. இராஜகோபுரத் திருப்பணிக்கு 26—6—58-ல் சென்னை அறநிலைய மந்திரி கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் கால்கோள் விழாவை நடத்தி வைத்தார்கள்.

இராஜகோபுரத் திருப்பணி ரூ. 10,000 செலவில் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கு தேவ ஸ்தான நிதியில் இருந்து செலவழிக்க முடியாமல் இருப்பதால் பொதுஜன நன்கொடை மூலமும் மற்ற வழிகளிலும் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு ஆத்திக அன்பர்களின் ஆதரவு பெரிதும் விரும்பப்படுகிறது. இராஜகோபுரத் திருப்பணிக்கு 'திருப்பணி கமிட்டி' அமைக்கப்பட்டு ஷ

கமிட்டி சென்னை அறநிலைய பாதுகாப்பிலாகா தஞ்சை உதவி கமிஷனர் அவர்களால் அங்கீகரிக்கப் பட்டு வேலை நடந்து வருகிறது. தஞ்சையிலுள்ள ஒரு தனவந்தர் பிரார்த்தனை நிமித்தம் இதுகாறும் இவ்வாலயத்துக்கு ஒரு நிரந்தரமான துவஜ ஸ்தம்பம் இல்லாத நிலையைப் போக்கி ஒரு நிரந்தர செப்புக்கவசம் போர்த்திய வேலைப்பாட்டுடன் கூடிய துவஜஸ்தம்பம் செய்ததற்கு ரூ. 1500 உபய மாக வழங்கியுள்ளார்கள். 3—11—58ல் த்வஜஸ்தம்பம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## 12 சமயப்பணி

குறைந்தது மாதம் ஒருமுறையாவது சைவசமயப் பிரசங்கங்கள் அறநிலைய பாதுகாப்பிலாக்கா பிரசாரகர் களைக்கொண்டும் மற்றபடி தகுந்தவர்களைக்கொண்டும் நடத்தப்படுகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருநக்ஷத்திரக் காலங்களில் சமயப் பிரசாரங்கள் நடத்தப்பெறுகின்றன.

மார்கழி மாதம் பூராவும் ஒலிபெருக்கியின் மூலம் ஓதுவாரைக் கொண்டும் திருவெம்பாவை திருப்பாவை இசைத்தட்டுக்களைக் கொண்டும் விடியற்காலையில் ஒலிப் பரப்பப்படுகின்றது. தினசரி பூஜா காலங்களில் திருமுறை பாராயணம் நடத்தப் பெறுகிறது.

## 13 சொத்துக்கள்

நஞ்சையில் 64.64 ஏக்கரும், புஞ்சையில் 22.99 ஏக் கரும் சில மனைக்கட்டுகளும் ரூ. 13516—45 பொறு மானமுள்ள திருவாபரணங்களுமிருக்கின்றன. நஞ்சை, புஞ்சை இவைகளின் வருஷ வருமான 1367-ம் பசலி யில் ரூ. 9318–71.

## 14 நிர்வாகம்

ஆலய நிர்வாகம் சென்னை அற நிலையப் பாது காப்பிலாக்காவினரின் ஆதீனத்திற்குட்பட்டது. ஷ இலாக்காவினரால் நியமிக்கப்பட்ட ஒரே டிரஸ்டி யால் ஆலயம் மிகசிரத்தையுடன் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீ வரதராசப்பெருமாள் கோயிலுக்கு இந்த ஆலயத்திலிருந்து இரண்டு காலப் பூசைக்கு நிதி உதவி செய்யப்பட்டு வருகிறது. ஸ்ரீ முல்லை மாகாளிக்கும் ஒரு கால பூசை நடந்து வருகிறது.

## 15 கல்வெட்டுகள்

கோயில் சுற்று மதில்களிலும் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் அரசாங்கக் கல்வெட்டு இலாகா அதிகாரிகள் 1910-லும் 1918-லும் கல் வெட்டுகள் பிரதி எடுத்திருக்கிறார்கள். சில விபரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

### பராந்தகன் I—மதுரைக்கொண்ட பரகேஸரி (கி. பி. 907-947)

#### சாசனம்—1

மதுரைக் கொண்ட கோப்பரகேசரி வற்மர்க்கு யாண்டு 8-வது விறைக் கூற்றத்து திருப்புடையான் இக்கருகாவூர் இத்தில்லை நாய நாருக்கு திருப்பணிக்கும் திரு நிமித்தியத்துக்கும் விட்ட நிலமாவது பழை யாற்றுக்கு கிழக்கு திருக்களியூர் யெல்லைக்கு தெற்க்கு கிளிப்பறம்புக்கு மேற்கு சாத்தம் புறை வாய்க்காலுக்கு வடக்கு இந்நாங் கெல்லைக் குள்பட்ட நிலமாவது வீற

முக்காணி அடி கொல்லால் நிலம் பதின்மூன்று வேலி இந் நிலம் பதின்மூன்று வேலியும் திருப்பணிக்கும் திரு நிமித்தியத்துக்கும் யெறு சாத்து யெறங்கு சாத்துக்கும் இக்கோயில் காள ஹஸிதப்பட்டற் கையில் இத்தில்லை நாயநாருக்கு தானமாக நீர் வார்த்துக் கொடுத்தேன். இப்படிக்கு இவை வி பாக்ஷபட்டற். இவை அறிவோம். இப்படிக்கு இவை திருமஞ்சனத் தேவர் எழுத்து. இவை அறிவோம். இப்படிக்கு இவை மங்களத்தறயன் எழுத்து. இப்படிக்கு இவை தில்லை நாயநார் எழுத்து. இவை அறிவோம்.

## சாசனம்—2

மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மர்க்கு ஆண்டு 13-ஆவது விறைக் கூற்றத்து திருப்புடையான் தில்லைக் குடைய அதிபதிய இந்நாய நாருக்கு தில்லையார்ச் சன்னதியில் திருவிளக்கு தூண்டா விளக்கெரிய பகல் ராவும் அனையா விளக் கெரிய நெயி விளக்காக இரண்டு விளக்கு இத்தில்லை நாயநார் சன்னதியில் தற்மமாக விளக்கு கெறியதற்கு நிலமாக விட்டது பொறசடி நிலம் இரண்டு மாக்காணி முன்திரிகை நிலமும் நெயி விளக் கெரிய தர்மமாக நீர் வார்த்துக் கொடுத்தேன். இப் படிக்கு இவை தேவராயர் எழுத்து. இப்படிக்கு இவை செல்வராயர் எழுத்து. இப்படிக்கு இவை விறபூபதி ராயர் எழுத்து. இப்படிக்கு இவை சொழவததறயன் எழுத்து. இப்படிக்கு இவை பிறதவராயன் எழுத்து. இப்படிக்கு இவை அறிவோம்.

## சாசனம் – 3

மதிரை கொண்ட கோப்பரகேசரி வர்மர்க்கு ஆண்டு 17-ஆவது விறைக் கூற்றத்து திருமஞ்சனத் தரயன் இக்கருகாவூர் இத்தில்லை நாயநாருக்கு இரு

நாச்சியாருக்கும் திருமஞ்சனக்குளி அபிஷேகத்துக்கு இக்கருகாவூரில் மழவராயபுரம் புஞ்சைத்திடல் நிலம் இரண்டரை வேலி. இந்நிலம் இரண்டரை வேலியும், இக் கோயில் தில்லை நாயநாருக்கும் இந் நாச்சியாருக்கும் மஞ்சள் குளி அபிஷேகத்துக்கு விட்டபடியினாலே இந்த தர்மத்தை யாதா மொருவற் பரிபாலனம் பண்ணுகுர பேர்கள் கங்கை கரையில் சிவ பிறிதிக்ஷ பண்ணின புண்ணியத்தை பெருவார்கள். இந்த தர்மத்துக்கு யாதாமொருவர் விகாதம் பண்ணுகிர பேர்கள் கங்கை கரையில் காராம் பசுவை கொன்ன தோஷத்தில் போவார்கள். இப்படிக்கு இவை குருதேவராயர் எழுத்து. இப்படிக்கு இவை சிவதாலத்தேவர் எழுத்து. இப்படிக்கு இவை செலவாக்கு தேவர் எழுத்து. இப்படிக்கு இவை மங்களராயர் எழுத்து. இவை அறிவோம்.

## சாசனம் — 4

மதிரை கொண்ட கோப்பரகேசரி வர்மர்க்கு ஆண்டு 21-ஆவது திருக்கருகாவூர் விழியாநத்தேவன் இந் நாட்டு இக் கோயில் மஹாதேவர்க்கு பிறிதியாக இந் நாயநார் இந்நாச்சியார் இச் சன்னதியில் பெருமையும் புண்ணியமும் இரண்டும் வேண்டியதால் திருவிளக்கு நெயிவிளக் கெரிய ஞள் ஒன்றுக்கு இத்திரு விளக் கெரிய நெயி செற் மூன்று (கொண்டக) ணக்கு படியால் இந்நிலம் விட்டது. பூவியாலூர் புஞ்சை திடல் நிலம் ஒன்றரை வேலி. இந்நிலம் ஒன்றரை வேலியும் இக் கோயில் மஹா தேவர்க்கும் இந் நாச்சியார்களுக்கும் திரு விளக்கு நெயி விளக்கெரிய தானமாக இவ்வூர் இக்கோயில் வர்ணரீகாக்ஷ பட்டற் கையில் நீர் வார்த்து கொடுத்தேன். இப்படிக்கு இவை சொலை மழவராயத் தேவர் எழுத்து. இப்படிக்கு இவை பூரண தேவர்

எழுத்து. இப்படிக்கு இவை சொற்றம் பாதராயர் எழுத்து. இப்படிக்கு இவை வீறமகா தேவராயர் எழுத்து. இப்படிக்கு இவை திருநீத்திராயர் எழுத்து. இப்படிக்கு யெல்லொற்களும் அறிவோம்.

### சாசனம்—5

மதிரை கொண்ட கோப்பரகேசரி வர்மர்க்கு ஆண்டு 23-ஆவது விறைக் கூற்றத்து திருக்கருகாவூர் இத் தில்லை நாயநார் மஹாதேர்க்கு தர்ம்ம சாசனமாக பண் ணிக் கொடுத்தது. இக்கோயில் இந் நாயநாருக்கு அமுதுபடி இரண்டு விளக்குக்கும் தானமாக நீர் வார்த்து கொடுத்து இக்கருகாவூர் மருவிழி நீல முள்ள தும் இக் கோயில் இந்நாயநாருக்கு தானமாக நீர் வார்த்துக் கொடுத்தேன். இப்படிக்கு இவை தில்லை தேவன் எழுத்து. இப்படிக்கு இவை குரந்தாவராயன் எழுத்து. இப்படிக்கு இவை பெருவத் தேவன் எழுத்து. இப்படிக்கு இவை செல்வராயன் எழுத்து. இப்படிக்கு இவை அறிவோம்.

---

**பராந்தகன் I (கி. பி. 907-947):** ஆதித்த சோழ னின் மகனை இவன் மதுரை கொண்ட கோப்பரகேசரி என்ற விருது பெற்று, பல தேவாலயங்களில் திருப்பணிகள் செய்து, பல நிவந்தங்கள் ஏற்படுத்தியுள்ளான். தன் குல தெய்வமான தில்லை நாயனர் என்கிற ஆடல் வல்லானிடம் ஈடுபாடுள்ளவனைதால், அவனுடைய நிவந்தங்களில் பெரும் பாலும் அவருக்கு அளிக்கப்பட்டனவாகவே இருக்கின்றன.

---

Annual Report on South Indian Epigraphy for 1910–Nos. 35–46 & 1918 Nos. 424–440.

## 16 பொதுநலப்பணி

தருமபுரம் ஆதீனத்தின் அன்பளிப்பாக அமைக்கப்பட்டு தற்போதைய ஆதீனகர்த்தர் அவர்களின் பெயரால் ஒரு நூல் நிலையம் தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. நூல் நிலையத்தில் பெரும் பகுதி சமய நூல்களே இடம் பெற்றிருக்கின்றன. நூல்களில் பெரும்பகுதி தருமை, துறசை, பனசை ஆதீனங்களால் அன்பளிப்பாக அளிக்கப்பட்டவை. மக்கள் படித்துப் பயனடைகிருர்கள்.

## 17 புராணங்களும்-திருப்பாடல்களும்.

| | |
|---|---|
| தலபுராணம்:— | 338 பாடங்களில் 9 சருக்கங்களாக இத்தலத்தின் தலபுராணம் அம்பலவாணப் பண்டாரம் என்பவரால் பாடப்பெற்றிருக்கிறது. |
| பதிற்றுப்பத்தந்தாதி: | ஆலத்தூர் கோவிந்தசாமி பிள்ளையவர்களால் பாடப்பெற்றது. |
| நான்மணிமாலை<br>இரட்டை மணிமாலை | வீரபத்ர சுவாமிகள் |
| திருத்தாண்டகம்:— | அப்பர் சுவாமிகள் |
| பண்-கௌசிகம்:— | திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் |
| ஊர்த்தொகை<br>பண் பழம்பஞ்சுரம் | சுந்தரமூர்த்தி நாயனர் |
| சிவக்ஷேத்ர சிவ நாமக் கலி வெண்பா | உமாபதி சிவாசாரியார் |
| விண்ணப்பக் கலி வெண்பா | இராமலிங்க ஸ்வாமிகள் |

# 18 Tirukkarugavur — A summary

Among the numerous shrines in Tanjore District the temple at Tirukkarugavur, near Papanasam, is unique in its importance. It is a Siva temple dedicated to Sri Mullaivananathar and Sri Garbharakshambika. Appar, Sundarar and Sambandar, the three among the four famous Nayanmars, have celeberated the glory of this temple in Soul-stirring verses of rare beauty and charm.

The one remarkable feature which distinguishes this temple from the innumerable other shrines of our land is that the Goddess Sri Garbharakshambika here, vouchsafes safety to women during pregnancy and child-birth. The uniform experience of the people of these parts bears unfailing testimony to the said characteristic attributed to the Deity. The name of the Sthalam itself brings out the significance of the temple.

It is an ancient temple, old in story and song. The presiding deity Sri Mullaivananatha swamy is in Sweyambhu Lingam and as such commands unique devotion from saivaite worshippers. The name of the deity is derived from the fact that Mullai, known as Madhvi or Vasanti in Sanskrit, is the favourite flower of this deity.

The Sthala Vriksham is itself Mullai creeper. But the fame of this temple rests largely upon the benign Goddess Sri Garbharakshambika (an aspect of Sri Parvathi) who offers protection to the human embryo. And it is no wonder that this temple draws worshippers from all sects including Vaishnavites. The inhabitants of the village speak to the fact, that within living memory, there has been no case of fatality to the mother or child during confinement. Even a casual visitor cannot fail to be thrilled by the motherly Grace and the imposing look of the image of the Ambika here. It is at a place like this that one can understand what "Sannidhyam" is.

The Sthalapuranas which are in Sanskrit and Tamil are preserved in manuscript forms and shows the antiquity of the temple. It is a fairly big temple in size occupying an extent of more than an acre. The imposing Gopuram at the entrance, and the tank in front of it with tall cocoanut-palms all around, present a very inviting appearance and lend a charm of its own to the visitor. The Gopuram and the huge compound walls tell the story of more than a thousand years, There are also ancient inscrip tions of the walls inside.

The Sthalapurana gives a detailed account of the origin of this Kshetram and

the various persons who obtained Divine Grace at this place. It would suffice to recount the story of Sage Nidhruva and his wife Vedhika, as it relates to the circumstances under which P a r v a t h i took the form of Sri Garbharakshambika in order to give special protection to women during pregnancy. The story is that Sage Nidhruva was living here with his wife Vedhika. One day when Sage Nidhruva was away, Sage Urdhvapada happened to visit the place. Vedhika who was then alone and in an advanced state of pregnancy unwittingly failed to offer due hospitality to the guest. Urdhvapada unaware of her difficulties got incensed at her conduct and landed a cruel curse upon her, as a result of which p o or Vedhika was visited with a foul disease which began to eat into the very vitals of not only herself but also the child in the Womb. The helpless Vedhika fervently prayed for relief to Goddess Parvathi who in the plentitude of Her mercy appeared before Vedhika in the form of Sri Garbharakshambika, totally erased the effect of the curse and saved Vedhika.

The story goes that the Goddess offered protection to the embryo by keeping it in a divine pot till it bloomed into a full-fledged child. Vedhika overwhelmed with joy, fell at the feet of Sri Garbharakshambika and prayed that the Ambika shoud take a permanent abode

at the place and continue to offer protection to future generations of women also. Thus we find this prayer being fulfilled even to this day at this holy place.



இராஜகோபுரமும்—நூல் நிலையமும்

# 19 தேவாரப் பாடல்கள்

## திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருப்பதிகம்.

*பண்–கௌசிகம்–[3ம்–திருமுறை]*

திருச்சிற்றம்பலம்.

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. [1]

விமுத வல்லசடை யான்றனை யுள்குவார்க்
கமுத நீழலக லாததோர் செல்வமாம்
கமுத முல்லை கமழ்கின்ற கருகாவூர்
அமுதர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. [2]

பழக வல்லசிறுத் தொண்டர்பா வின்னிசைக்
குழக ரென்றுகுழை யாவழை யாவரும்
கழல்கொள் பாடலுடை யார்கரு காவூரெம்
அழகர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. [3]

பொடிமெய் பூசிமலர் கொய்துபு ணர்ந்துடன்
செடிய ரல்லாவுள்ள நல்கிய செல்வத்தர்
கடிகொண் முல்லைகம ழுங்கரு காவூரெம்
அடிகள் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. [4]

மைய லின்றிமலர் கொய்துவ ணங்கிடச்
செய்ய வுள்ளம்மிக நல்கிய செல்வத்தர்
கைதன் முல்லைகம ழும்கரு காவூரெம்
ஐயர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. [5]

மாசில் தொண்டர்மலர் கொண்டு வணங்கிட
ஆசை யாரவரு ணல்கிய செல்வத்தர்
காய்சி னத்தவிடை யார்கரு காவூரெம்
ஈசர் வண்ணம்எரி யும்எரி வண்ணமே [6]
வெந்த நீறுமெய் பூசிய வேதியன்
சிந்தை நின்றருண ல்கிய செல்வத்தன்
கந்த மௌவல்கம ழுங்கரு காவூரெம்
எந்தை வண்ணம்எரி யும்எரி வண்ணமே, [7]
... ... ... ... [8]
பண்ணி னேர்மொழி யாளையோர் பாகனர்
மண்ணு கோலம்முடை யம்மல ராஞெடும்
கண்ண னேடவரி யார்கரு காவூரெம்
அண்ணல் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. [9]
போர்த்த மெய்யினர் போதுழல் வார்கள்சொல்
தீர்த்த மென்றுதெளி வீர்தெளி யேன்மின்
கார்த்தண் முல்லைகம ழுங்கரு காவூரெம்
ஆர்த்தர் வண்ணம்அழ லும்அழல் வண்ணமே. [10]
கலவ மஞ்ஞையுல வுங்கரு காவூர்
நிலவு பாடலுடை யான்றன நீள்கழல்
குலவு ஞானசம் பந்தன் செந்தமிழ்
சொலவலாரவர் தொல்வினை தீருமே. [11]

*திருச்சிற்றம்பலம்.*

## திருநாவுக்கரசு ஸ்வாமிகள் திருப்பதிகம்.

*திருத்தாண்டகம்–[6ம்–திருமுறை]*

*திருச்சிற்றம்பலம்.*

---

குருகாங் வயிரமாங் கூறு நாளாங்
கொள்ளுங் கிழமையாங் கோளே தானும்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும்

ஒருகா லுமையாளோர் பாக னுமாம்
உள்நின்ற நாவிற் குரையா டியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [1]

வித்தாம் முளையாகும் வேரே தானும்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமு மாம்பரஞ் சோதிதானேயாகும்
தொத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றுதென் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணு காட்டுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [2]

பூத்தானும் பூவின் நிறத்தா னுமாம்
பூக்குளால் வாசமாய் மன்னி நின்ற
கோத்தானுங் கோல்வளையாள் கூற னுகுங்
கொண்ட சமயத்தார் தேவ னுகி
ஏத்தாதார்க் கென்று மிடரே துன்பம்
ஈவானு மென்னெஞ்சத் துள்ளே நின்று
காத்தானுங் காலன் அடையா வண்ணங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [3]

இரவனும் எல்லி நடமா டியாம்
எண்டிசைக்குந் தேவனும் என்று ளானும்
அரவனும் அல்லல் அறுப்பா னுமாம்
ஆகாச மூர்த்தியாம் ஆனே றேறும்
குரவனுங் கூற்றை யுதைத்தான் தானுங்
கூறுத வஞ்சக் குயலர்க் கென்றும்
கரவனுங் காட்சிக் கெளியா னுமாங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [4]

படைத்தானும் பாரை யிடந்தா னுகும்
பரிசொன் றறியாமை நின்றான் தானும்

உடைத்தானும் ஒன்னார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலால் மூட்டி யொருக்கி நின்று
அடைத்தானுஞ் சூலம் மழுவோர் நாகம்
அசைத்தானும் ஆனேறென் றூர்ந்தா னுகும்
கடைத் தானுங் கள்ள மறிவார் நெஞ்சிற்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [5]
மூலனும் மூர்த்தியாம் முன்னே தானும்
மூவாத மேனிமுக் கண்ணினானும்
சீலனுஞ் சேர்ந்தா ரிடர்கள் தீர்க்குஞ்
செல்வனும் செஞ்சுடர்க்கோர் சோதி தானும்
மாலனும் மங்கையோர் பங்க னுகும்
மன்ருடியாம் வானோர் தங்கட் கெல்லாம்
காலனுங் காலனைக் காய்ந்தா னுகுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [6]
அரைசே ரரவனும் ஆலத் தானும்
ஆதிரைநா ளானும் அண்ட வானோர்
திரைசேர் திருமுடித் திங்க ளானும்
தீவினை நாசனென் சிந்தை யானும்
உரைசே ருலகத்தா ருள்ளா னுமாம்
உமையாளோர் பாகனும் ஓத வேலிக்
கரைசேர் கடல்நஞ்சை யுண்டா னுகுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [7]
துடியாந் துடியின் முழக்கந் தானும்
சொல்லுவார் சொல்லெல்லாஞ் சோதிப் பானும்
படிதானும் பாவ மறுப்பா னுகும்
பால்நீற்ற னும்பரஞ் சோதி தானும்
கொடியானும் கூற்றை யுதைத்தா னுகுங்
கூருத வஞ்சக் குயலர்க் கென்றும்
கடியானுங் காட்சிக் கரியா னுகும்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [8]

விட்டுருவங் கிளர்கின்ற சோதி யானும்
விண்ணவர்க்கும் அறியாத சூழ லானும்
பட்டுருவ மால்யானைத் தோல்கீண் டானும்
பலபலவும் பாணி பயின்றான் தானும்
எட்டுருவ மூர்த்தியாம் எண்தோ ளானும்
என்னுச்சி மேலானும் எம்பி ரானும்
கட்டுருவங் கடியானைக் காய்ந்தா னாகும்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [9]

பொறுத்திருந்த புள்ளூர்வான் உள்ளா னாகி
உள்ளிருந்தங் குள்நோய் களைவான் தானாய்ச்
செறுத்திருந்த மும்மதில்கள் மூன்றும் வேவச்
சிலைகுனியத் தீமூட்டுந் திண்மை யானும்
அறுத்திருந்த கையானும் அந்தார் அல்லி
யிருந்தானை யொருதலையைத் தெரிய நோக்கிக்
கறுத்திருந்த கண்ட முடையான் போலுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [10]

ஒறுத்தானும் ஒன்னார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலை மாட்டி யுடனே வைத்து
இறுத்தானும் எண்ணான் முடிகள் பத்தும்
இசைந்தானும் இன்னிசைகள் கேட்டா னாகும்
அறுத்தானும் அஞ்சும் அடக்கி யங்கே
ஆகாய மந்திரமு மானா னாகும்
கறுத்தானும் காலனைக் காலால் வீழக்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே. [11]

திருச்சிற்றம்பலம்.

## சுந்திரமூர்த்தி ஸ்வாமிகள்—ஊர்த்தொகை.
## பண் பழம்பஞ்சுரம்.

---

ஆரூரத்தாவை யாற்றமு தேயளப் பூரம்மானே
காரூர்பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகாவூரானே
பேரூருறை வாய்பட்டிப் பெருமான் பிறவாநெறியானே
பாரூர் பலரும் பரவப்படுவாய் பாசூரம்மானே.

---

## திருநாவுக்கரசு ஸ்வாமிகள்—பாவநாசத் திருப்பதிகம்.
*[4ம்-திருமுறை]*

---

### பண்–பழம்பஞ்சுரம்.

மருகலுறை மாணிக்கத்தை வலஞ்சுழியின் மாலையைக்
கருகாவூரிற் கற்பகத்தை காண்டற்கரிய கதிரொளியை
பெருவேளூ ரெம்பிறப்பிலியை பேணுவார்கள் பிரிவரிய
திருவாஞ்சியத் தெஞ்செல்வனைச் சிந்தையுள்ளே

வைத்தேனே.

---

## திருநாவுக்கரசு ஸ்வாமிகள்—வீழிமிழலை திருத்தாண்டகம்.
*[6ம்-திருமுறை]*

---

பெரும்புலியூர் விரும்பினர் பெரும்பாழியார்
பெரும்பற்றப் புலியூர் மூலத்தானத்தார்
இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார்
இன்னம்பரார் ஈங்கோய்மலையார் இன்சொற்

கரும்பனையாள் உமையோடுங் கருகாவூரார்
கருப்பறிய லூராரர் கரவீரத்தார்
விரும்பமரர் இரவுபகல் பரவியேத்த
வீழிமிழலையே மேவினாரே.

---

திருநாவுக்கரசு ஸ்வாமிகள்—க்ஷேத்திரக்கோவை
திருத்தாண்டகம்.
*[6ம்-திருமுறை]*

திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன்பள்ளி
தேவூர்சிரபுரஞ் சிற்றேமம் சேறை
கொண்டீச்சரங் கூந்தலூர் கூழையூர்
கூடல்குருகாவூர் வெள்ளடை குமரிகொங்கு
அண்டர்தொழும் அதிகை வீரட்டானம்
ஐயாற சோகந்தி ஆமாத்தூரும்
கண்டியூர் வீரட்டங் கருகாவூருங்
கயிலாய நாதனையே காணலாமே.

---

கருகாவூர் மேவும் கரும்பனையாள் மோகம்
முருகலர்த்தார் முல்லைவன மூர்த்தீ......
சிவக்ஷேத்திர சிவநாமக் கலி வெண்பா—83.

---

அழுகாவூர் சூழ்ந்தழகு பெற வோங்கும்
கருகாவூர் இன்பக் கதியே......
விண்ணப்பக் கலி வெண்பா.

---

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீகர்ப்பரக்ஷாம்பிகை சமேத ஸ்ரீமுல்லைவனநாதஸ்வாமி
திருவடிகள் சரணம்.

உ

சிவமயம்

# தனித்தோத்திரங்கள்

ஸ்ரீமாதவீ கானனஸ்தே
கர்ப்பரக்ஷாம்பிகே பாஹி பக்தம் ஸ்துவந்தம்—ஸ்ரீமாதவீ
வாபீதடே வாமபாகே
வாமதேவஸ்ய தேவஸ்ய தேவீ ஸ்திதா த்வம்
மான்யா வரேண்யா வதான்யா
பாஹி கர்ப்பஸ்த ஜந்தூன்ஸ்ததாபக்த லோகான்
ஸ்ரீமாதவீ

ஸ்ரீகர்ப்பரக்ஷாபுரேயா
திவ்ய ஸௌந்தர்ய யுக்தா ஸுமாங்கால்யகாத்ரீ
தாத்ரீ ஜநித்ரீ ஜனனும்
திவ்யரூபாம் தயார்த்ராம் மனோக்ஞாம் பஜேதாம்
ஸ்ரீமாதவீ

ஆஷாடமாஸே ஸுபுண்யே
சுக்ரவாரே ஸுகந்தேன கந்தேன லிப்தா
திவ்யாம்பரா கல்பவேஷா
வாஜபேயாதி யாகஸ்த பக்தைஸ்ஸுத்ருஷ்டா
ஸ்ரீமாதவீ

கல்யாண தாத்ரீம் நமஸ்யே
வேதிகாக்ய ஸ்த்ரியா கர்ப்பரக்ஷாகரீம் த்வாம்
பாலைஸ்ஸதா ஸேவிதாங்க்ரிம்
கர்ப்பாக்ஷார்த்தமாராதுபேதைருபேதாம்
ஸ்ரீமாதவீ

பிரம்மோத்ஸவே விப்ரவீத்யாம்
வாத்யகோஷேண துஷ்டாம் ரதே ஸந்நிவிஷ்டாம்
ஸர்வாத்த தாத்ரீம் பஜேஹம்
தேவப்ருந்தைரபீட்யாம் ஜகன்மாதரம் த்வாம்
ஸ்ரீமாதவீ

மாதா ஸமஸ்த ஜகதாம் புவனத்ரயேபி
க்யாதா ச கர்ப்ப பரிரக்ஷண தத்பரேதி
த்யாதா ததாதி நிகிலான் க்ருபயாஹ்யபீஷ்டான்
த்ரிஷ்டா ச வர்ஷதி ததைவ ஸுரச்ரியம் ந:


ஸ்துதி: க்ருதானந்தராம தீக்ஷிதேந ஸுபக்தித:
கர்ப்பரக்ஷாம்பிகாயாஸ்து ப்ரஸாதாய பவேதியம்.

1 வேதிகை என்றொரு கர்ப்பிணிக்கு
விளைந்த துன்பமும் நீங்கிடவே
மாதுமை காத்தமை யாலேகர்ப்ப
ரட்சணி நாமம்ப டைத்தனளே.

2 அகத்திய காவிரி என்னும்பேரால்
அமையும் வெட்டாற் றின்கரையில்
கற்பெனு முல்லைவ னத்தினிற்றளி
கொண்டனள் கருகா வூரதனில்

3 மூவர் பாடிய தேவாரத்துடன்
மூதறி வாளரா னந்தராம
தீட்சிதர் பாடிய தோத்திரத்தால்
தேவியை நாளும் பரவுதுமே.

—T. S. வைத்யநாதன், B. A., B.L.




கோபுர வாயிலிலிருந்து உள்தோற்றம்



வஸந்த மண்டபம்



நான்முகனார்



மாதொருபாகனார்